1980 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பிரிவுகள் 2 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

[பிற்பகல் 2–00]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு 10/1980) நிறை வேற்ற பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

எ. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு 1980).

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே, "தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1980) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடபெற்றுநிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாகஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பெற்றது

பிரிவுகள் 2 முதல் 13 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்த கைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1980) நிறை வேற்றவேண்டும், என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1980 பிப்ரவரி 7–ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.